**செ.கு.எண் :003** **நாள் : 09.01.2023**

**இன்று (9.1.2023) சட்டமன்றப் பேரவையில், மாண்புமிகு ஆளுநர் அவர்களின் உரை முடிவடைந்த பின்னர், மாண்புமிகு தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் திரு. தங்கம் தென்னரசு அவர்கள் சட்டமன்றப் பேரவைக்கு வெளியே செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டி:**

புத்தாண்டின் தொடக்கத்தில் மரபின் அடிப்படையில் மாண்புமிகு ஆளுநர் அவர்கள் சட்டப்பேரவையில் உரை நிகழ்த்திட, முறையான வகையில் அவருக்கு அழைப்பும் விடுக்கப்பட்டு, அவருடைய வரைவு உரையானது தமிழ்நாடு அரசின் சார்பில் அவருக்கு அனுப்பப்பட்டு, அதற்கு உரிய ஏற்பளிப்பும் ஆளுநர் அவர்களாலே தரப்பட்டு, ஆளுநரால் ஏற்கனவே ஏற்பளிக்கப்பட்ட அந்த உரை, அச்சடிக்கப்பட்டு தேவையான வகையில் உறுப்பினர்களுக்கும் மற்றவர்களுக்கும் வழங்கப்பட்டிருக்கிறது, கணினியிலும் கூட அது ஏற்றப்பட்டு அவையிலே இன்றைக்கு வைக்கப்பட்டிருந்தது.

பொதுவாக, ஆளுநர் அவர்களுக்கும், நம்முடைய திராவிட மாடல் கொள்கைகளுக்கும் இடையிலே கருத்து மோதல்கள் இருந்தாலும், ஆளுநருடைய செயல்பாடுகள் முற்றிலும் ஏற்றுக்கொள்ள முடியாத நிலையில் இருந்தாலும், ஆளுநர் உரையைப் பொறுத்தமட்டில், அவர் பேரவைக்கு வருகை தரக்கூடிய நிலையில் அவருக்கு உரிய முழு மரியாதையை அளிக்கக்கூடிய வகையில் அவருடைய செயல்பாடுகளிலே நாங்கள் மாறுபட்ட கருத்துக்களைக் கொண்டிருந்தாலும், ஆளுநர் உரையை தொடங்குவதற்கு முன்பு, எந்தவிதமான ஒரு எதிர்ப்பையும் தெரிவிக்காமல் அமைதி காத்து, ஜனநாயக ரீதியில் ஆளுநருக்கு உரிய மரியாதையை நாங்கள் அரசின் சார்பாக இன்றைக்கு அளித்தோம்.

பேரவையிலே மிகுந்த கண்ணியத்தோடும் அரசியலமைப்பு சட்டத்தின் அடிப்படையிலும், ஆளுங்கட்சியைச் சார்ந்திருக்கக்கூடிய முதல்வர் உள்ளிட்ட அமைச்சர்கள், உறுப்பினர்கள் அத்தனை பேரும் இன்றைக்கு அந்த முறையைப் பின்பற்றி அமர்ந்திருந்தார்கள். ஆனால், ஆளுநர் அவர்கள் இன்றைக்கு பேரவைக்கு வந்து அவர் உரையை வாசிக்கும்போது, இதுகாரும் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கக்கூடிய நடைமுறைகளுக்கு மாறாக, குறிப்பாக, சட்டவிதிகளுக்கு மாறாக, அவற்றை

மீறக்கூடிய வகையில் அரசியலமைப்புச் சட்டத்தினுடைய விதிகளுக்கு முற்றிலும் முரணான வகையில், ஆளுநர் இன்றைக்கு தன்னுடைய உரையினை வாசித்திருக்கிறார் என்பது மிகுந்த வருத்தத்திற்குரிய ஒன்று என்றுதான் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், ஒரு தீர்மானத்தைக் கொண்டுவரக்கூடிய சூழ்நிலை உருவாகியிருக்கிறது.

ஆளுநர் அவர்களுக்கு, அவர் ஆற்ற வேண்டிய அந்த உரையினுடைய வரைவு ஏற்கனவே அவருக்கு அனுப்பப்பட்டு அதற்கான ஒப்புதலை அவர் அளித்திருக்கிறார். நான் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டும் என்றால், கடந்த 5-ஆம் தேதியே முதலமைச்சர் அவர்களுடைய ஒப்புதலைப் பெற்று, அந்த வரைவு உரை ஆளுநருடைய ஏற்பளிப்பிற்கு அனுப்பப்பட்டு, ஆளுநர் அவர்கள் கடந்த 7-ஆம் தேதி அதை ஏற்றுக் கொண்டிருக்கிறார். எந்த வரைவு உரையை தமிழ்நாடு அரசாங்கத்தினுடைய ஒரு கொள்கை உரையாக, ஆளுநர் உரை என்பதே ஒரு அரசினுடைய கொள்கையை எடுத்துச் சொல்லக்கூடிய ஒரு உரை, ஒரு கொள்கை விளக்க வரைவுரை. அந்த வரைவுரையை ஆளுநருக்கு அனுப்புகிற போது, அந்த உரைக்கு முழுமையான ஏற்பளிப்பினை கடந்த 7-ஆம் தேதியே ஆளுநர் அவர்கள் அளித்திருக்கிறார்கள். இன்றைக்கு 9-ஆம் தேதி. 5-ஆம் தேதி முதலமைச்சர் அவர்களால் ஒப்புதல் அளிக்கப்பட்டு ஆளுநருக்கு அனுப்பி வைக்கப்பட்டது, அவர் 7-ஆம் தேதி ஒப்புதல் அளித்திருக்கிறார். இன்றைக்கு 9-ஆம் தேதி வந்திருக்கிறார். என்னிடத்தில் அதற்கான ஆதாரம் இருக்கிறது. முதலமைச்சர் என்றைக்கு கையெழுத்திட்டிருக்கிறார், ஆளுநர் அவர்கள் கையெழுத்திட்டு அதற்கான ஒப்புதலை அளித்திருக்கிறார் என்று நீங்களே பார்க்கலாம்.

ஆக, முழுமையாக ஒப்புதல் அளிக்கப்பட்ட அந்த உரைக்குப் பிறகும், அவரால் ஏற்பளிக்கப்பட்டதற்குப் பிறகும் இன்றைக்கு அவர் அவைக்கு வந்து, அவர் படித்திருக்கக்கூடிய ஆளுநர் உரை என்பது முற்றிலும் ஏற்றுக்கொள்ள முடியாத ஒன்று. காரணம், ஆளுநர் உரையிலே அவர் ஏற்கனவே அரசின் சார்பில் கொடுத்திருப்பதில் இருந்து deviate ஆகிறார் என்பது மாத்திரமல்ல, நான் மிகக் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டுமென்றால், அரசாங்கத்தினுடைய செயல்பாடுகளை அரசாங்கம்

செய்திருக்கக்கூடிய காரியங்களை அவர் சொல்வதற்கு முன்வராத நிலையில், மிகக் குறிப்பாக, நவீன தமிழ்நாட்டை கட்டமைத்து உருவாக்கி இருக்கக்கூடியவர்கள், இந்த மாநிலம் இந்தியாவிலேயே இன்றைக்கு தலைசிறந்த மாநிலங்களில் ஒன்று, மிக முன்னணி மாநிலங்களில் ஒன்று, மிக முக்கியமான மாநிலங்களில் ஒன்று, முதன்மையான மாநிலங்களில் ஒன்று என்று எல்லா குறியீடுகளிலும் சமூக, பொருளாதார அத்தனை குறியீடுகளிலும் இன்றைக்கு தமிழ்நாட்டை முதன்மை மாநிலமாக நவீன தமிழகமாக உருவாக்கியிருக்கக்கூடிய தலைவர்கள் தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, தலைவர் கலைஞர், பெருந்தலைவர் காமராஜர், இன்னும் சொல்ல வேண்டும் என்று சொன்னால், இந்த நாட்டில் சமத்துவத்திற்காக போராடி, இந்த அரசியலமைப்பு சட்டத்தையே உருவாக்கினாரே, எந்த அரசியலமைப்புச் சட்டத்தின் கீழ் இன்றைக்கு ஆளுநராக பொறுப்பெற்றுக் கொண்டிருக்கிறார்களோ, எந்த அரசியலமைப்புச் சட்டத்தின் கீழ் இன்றைக்கு அவைக்கு வருகிறோமோ அதை உருவாக்கித் தந்த அண்ணல் அம்பேத்காருடைய பெயரைக்கூட இன்றைக்கு சொல்ல மறுத்து ஆளுநர் சென்றிருக்கிறார் என்பதை நான் உங்களிடத்தில் சுட்டிக்காட்ட விழைகிறேன்.

அது மாத்திரமல்ல. அவர் இன்றைக்கு ஆளுநர் உரையிலே தவிர்த்திருக்கக்கூடிய விஷயங்களெல்லாம் என்ன என்று பார்த்தால், அரசினுடைய கொள்கைகளாக சுட்டிக்காட்டப்பட்டிருக்கக்கூடிய விஷயங்கள் சமூக நீதி, சமத்துவம், பெண் அடிமை ஒழிப்பு, மத நல்லிணக்கம், உள்ளடக்கிய வளர்ச்சி இவை எல்லாம் இருக்கக்கூடிய இந்த வார்த்தைகளை எல்லாம் ஆளுநர் இன்றைக்கு தவிர்த்திருக்கிறார்.

நான் கேட்க விரும்புகிறேன். இதேபோலத்தான், ஒன்றிய அரசு தன்னுடைய உரையை குடியரசுத் தலைவருடைய உரையை வைக்கிறபோது, குடியரசுத் தலைவர் அதிலே எந்தவிதமான மாற்றமும் செய்வதில்லை, அதை அப்படியே படிக்கிறார். ஆனால் ஆளுநர் அவர்கள், இன்றைக்கு அந்த உரையை விடுத்து, இந்த உரையிலே விடுப்பது மாத்திரமல்ல, அவர் சில விஷயங்களை அவராகவே அதிலே புதிதாக சேர்த்து சொல்வது என்பது நிச்சயமாக ஏற்புடையது அல்ல. அதிலும் குறிப்பாக

இன்னும் சொல்ல வேண்டும் என்றால், முத்தாய்ப்பாக, ஆளுநர் அவர்கள் தேசிய கீதத்திற்கு கூட உரிய மரியாதை தராமல், முதலமைச்சர் பேசுகிறபோதே தேசிய கீதம் போடுவதற்கு முன்பாகவே, அதற்குக் கூட இல்லாமல் அவர் வெளியே சென்று இருப்பது என்பது, அது தேசிய கீதத்திற்கும் நம் நாட்டுக்கும் ஒரு இழுக்காக நாங்கள் கருதுகிறோம்.

அதே போல அதிமுக சேர்ந்தவர்கள் இன்றைக்கு உங்களிடம் பேட்டி கொடுத்துவிட்டு சென்றிருக்கிறார்கள். அவர்கள் என்ன செய்திருக்க வேண்டும்? உள்ளபடியே அவர்கள் அவையில் இருந்திருக்க வேண்டும். ஆனால் அதற்கு முன்பாகவே அவர்கள் இன்று வெளியேறி சென்றிருக்கிறார்கள். தேசிய கீதம் போடுவதற்கு முன்பாகவே அதிமுக வெளியேறியது தான், அதிமுக இன்றைக்கு செய்திருக்கக்கூடிய மிக அநாகரிகமான செயல் என்று நான் சொல்ல விரும்புகிறேன்.

இன்னும் சொல்ல வேண்டுமென்று சொன்னால், ஆளுநர் அவர்கள் இன்றைக்கு சனாதனக் கொள்கைகளை எல்லாம் வலியுறுத்திக் கொண்டிருக்கிறார். அவர் சனாதனக் கொள்கைகளை எல்லாம் அவர் வெளியே பேசலாம். ஆனால் அவைக்கு வருகிறபோது, அந்தக் கொள்கைகளுக்கு, அவருடைய சொந்த விருப்ப வெறுப்புகளின் அடிப்படையிலே, according to whims and fancies அவர் இங்கே கொண்டுவருவது என்பது நிச்சயமாக ஏற்புடையது அல்ல.

ஆனால், அதிமுக-வை பொறுத்தமட்டில் அவர்கள் நம்முடைய ஆளுநர், தமிழ்நாடு என்று பேரறிஞர் அண்ணாவால் உருவாக்கப்பட்ட அந்த வார்த்தைக்கு மாறாக, ஒரு பதத்தை உருவாக்க வேண்டும் என்று சொல்வதைக்கூட கண்டிப்பதற்கு வக்கோ, வகையோ, திராணியோ இல்லாமல் அடிமை சாசனத்தை எழுதிக் கொடுத்துவிட்டு அதிமுக-வினர் இன்றைக்கு வெளியே சென்றிருப்பது என்பது வெட்கக்கேடானது. அவர்களும் கூட, தேசிய கீதத்தை புறக்கணித்திருப்பது அநாகரித்தினுடைய உச்சக்கட்டம் என்று நான் இங்கே தெரிவிக்க விரும்புகிறேன்.

எனவே இன்றைய நிலையில், நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இன்றைக்கு ஒரு தீர்மானத்தை முன்மொழிந்து, ஆளுநர் உரையிலே ஏற்கனவே

அவரால் ஒப்பளிக்கப்பட்டிருக்கக்கூடிய அந்த உரைதான் இடம்பெற வேண்டும் என்று தெரிவித்தார்.

**கேள்வி**: 5-ஆம் தேதியே நீங்கள் அனுப்பியதாகவும், அவர் 7-ஆம் தேதி ஒப்புதல் அளித்ததாகவும் சொல்கிறீர்கள், எத்தனை நாட்களுக்குள் நாம் அனுப்ப வேண்டும், இதற்கான நடைமுறை என்ன?

**பதில்:** முதல் நாள் இரவுதான் அனுப்பினோமென்றால், நான் படிக்கவில்லை என்று சொல்லலாம். 5-ஆம் தேதியே நாங்கள் அனுப்பியிருக்கிறோம், அதை அவர் படித்துவிட்டு 7-ஆம் தேதி ஒப்புதல் அளித்து, நமக்கு திரும்பியும் வந்திருக்கிறது. இன்றைக்கு 9-ஆம் தேதி. இத்தனை நாட்கள் கடந்து இன்றைக்கு ஆளுநர் அதிலே முற்றிலும் மாறுபட்ட வகையிலே நான் குறிப்பிட்டுச் சொல்லியிருக்கக்கூடிய பகுதிகளை நீக்கிவிட்டு, அவராக சில பகுதிகளை தானாக இணைத்து படித்திருப்பது என்பது ஏற்புடையது அல்ல. இதுபோன்று செய்யக்கூடாது.

**கேள்வி**: இதுபோன்று வேறு எங்காவது சட்டமன்றத்தில் நடந்திருக்கிறதா?

**பதில்:** இதுபோன்று செய்யக்கூடாது. அதைத்தான் நான் ஏற்கனவே சொன்னேன். பாராளுமன்றத்தில் குடியரசுத்தலைவர் அவர்கள் உரை நிகழ்த்துகிறபோது, ஒன்றிய அரசு எதை கொடுக்கிறார்களோ அதைப் படிக்கலாம். ஆனால், சொந்தமாக அவர் படிப்பது என்பதோ, இந்த நாட்டினுடைய அரசினுடைய கொள்கை, திரும்பத் திரும்ப அதைத்தான் சொல்கிறேன். திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய கொள்கை மாத்திரமல்ல, ஒரு ஆளுநர் உரை என்பது அரசினுடைய கொள்கை முடிவை சொல்லக்கூடிய ஒன்று. எனவேதான், இது அரசியலமைப்புச் சட்டத்திற்கு உட்பட்ட ஒன்று, அரசினுடைய கொள்கை முடிவை சொல்லக்கூடிய வரைவு உரையில் ஆளுநர் தன்னுடைய விருப்பு வெறுப்புக்கு ஏற்றவாறு மாறுதல் செய்வதோ, அதிலிருக்கக்கூடிய அரசினுடைய கொள்கை, திமுக என்ற கட்சியினுடைய கொள்கையை மாற்றம் சொல்லக்கூடிய இடம் கிடையாது. ஆளுநர் உரை என்பது அரசாங்கத்தின், தமிழ்நாடு அரசாங்கத்தின் கொள்கை உரையை சொல்லக்கூடிய ஒன்று. அந்த கொள்கை

உரையிலிருந்து அவர் மாறுபடுவது என்பதுதான் ஏற்புடையது அல்ல. அதைத்தான் நாங்கள் இது ஒரு deviation என்று சொல்கிறோம்.

**கேள்வி**: கூடுதலாக ஆளுநர் ஏதாவது சேர்க்க வேண்டுமென்றால், முன்னமே உங்களிடம் தகவல் சொல்வார்களா?

**பதில்:** எதுவும் சொல்லவில்லை. நாங்கள் உரையை அனுப்புகிறோம். ஆளுநர் கவனத்திற்கு வரும்போது எனக்கு இந்தப் பத்தியில் எனக்கு மாறுபட்ட கருத்து இருக்கிறது, இதை நீங்கள் நீக்க வேண்டும், சேர்க்க வேண்டும் என்று ஏதாவது வந்திருந்தால் பரவாயில்லை. நாங்கள் அனுப்பியதில் அப்படியே கையெழுத்து போட்டார்கள்.

**கேள்வி**: தீர்மானத்தின்போது, ஆளுநர் பாதியிலேயே வெளியேறினார்கள், இது ஏதாவது தாக்கத்தை ஏற்படுத்துமா?

**பதில்:** சட்டரீதியாக என்ன இருக்கும் என்று தெரியவில்லை. ஆனால், இந்த session-க்கு ஒன்றும் இல்லை. ஆளுநர் வந்து இந்த ஆளுநர் உரையை செய்வது என்பது ஒரு மரபு.

**கேள்வி**: அவர் படித்தது என்று சொல்கிறீர்கள்?

**பதில்:** அது நாங்கள் சொல்லவில்லை, தீர்மானமாக நிறைவேற்றப்பட்டிருக்கிறது.

**கேள்வி**: அந்தத் தீர்மானம் கொண்டுவரும்போது பாதியிலேயே வெளியேறி விடுகிறார்.

**பதில்:** தீர்மானம் நிறைவேற்ற வேண்டியதில் ஆளுநர் இருக்கவேண்டிய அவசியம் கிடையாது இல்லையா?

**கேள்வி**: உரை முடியவேயில்லை, தேசிய கீதம் படிப்பதற்கு முன்பே வெளியே சென்றுவிட்டாரே?

**பதில்:** அவர் போவது பற்றி ஒன்றுமில்லை, அது அவருடைய choice.

**கேள்வி**: அது வழக்கமான நடைமுறையா?

**பதில்:** வழக்கமான நடைமுறை இல்லை என்பதால்தானே சொல்கிறோம். தேசிய கீதம் முடிப்பதற்கு முன்பாக ஆளுநர் அவர்களே சென்றிருப்பது தேசிய கீதத்திற்கு செய்திருக்கக்கூடிய அவமரியாதை என்று நான் ஏற்கனவே சொல்லியிருக்கிறேன். நான் என்ன சொல்கிறேனென்றால், ஒரு தீர்மானம் நிறைவேற்றுவதற்கு ஆளுநர் அங்கு இருக்க வேண்டிய அவசியம் கிடையாது. மன்ற உறுப்பினர்கள் அனைவராலும், இருந்த அனைத்து உறுப்பினர்களாலும் ஒருமனதாக இந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**கேள்வி:** மரபை மீறியதாக என்று சொல்கிறீர்களே, இதை சட்டரீதியாக அணுகமுடியுமா?

**பதில்:** வாய்ப்புகள் என்ன இருக்கிறது என்று பார்ப்போம்.

**கேள்வி:** ஆளுநருடைய இந்த செயலினால்தான், நாம் விதியை தளர்த்தி தீர்மானத்தை கொண்டு வருகிறோம், ஏனென்றால், கவர்னர் உரையின்போது வேறு எந்த agenda-ம் இருக்கக்கூடாது அல்லவா?

**பதில்:** அந்த சூழ்நிலையை ஆளுநர் அவர்கள் உருவாக்கிவிட்டார்.

**கேள்வி:** இதுவரை கொள்கை முரண் சார்ந்து அரசியல் வெளியில் செய்து கொண்டிருந்தார், இன்றைக்கு சட்டமன்றத்திகுள்ளேயே அதை செய்ய ஆரம்பித்துவிட்டாரே...

**பதில்:** அதுதான் எங்களுக்கு இருப்பது. நான் சொல்கிறேன். வெளியே பல்வேறு விதமான முரண்பாடு உண்டு. ஆளுநருடைய கொள்கைகளுக்கும், திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும், திராவிட மாடல் கொள்கைகளுக்கும், திராவிட வளர்ச்சியை உள்ளடக்கியிருக்கக்கூடிய முழுமையான எங்களுடைய சித்தாந்தம் மரபிற்கும் பல்வேறு வேறுபாடுகள் இருக்கிறது. அது குறித்து நாங்கள் வெளியே பேசிக் கொள்ளலாம். ஆனால், ஒரு ஆளுநர் சட்டமன்றத்திற்குள் அரசியலமைப்புச் சட்டத்திற்கு உட்பட்டு நடக்கக்கூடிய நடவடிக்கைகளில் இதுபோன்ற ஒரு சூழ்நிலை ஏற்படுத்துவது நிச்சயமாக ஏற்றுக்கொள்ள முடியாது.

**கேள்வி:** அரசினுடய கொள்கைகளை ஆளுநர் படிக்கும்போது, உங்கள் கூட்டணிக் கட்சியில் இத்தனை பேர் வெளிநடப்பு செய்தார்களே, அது சரியான நடைமுறைதானா? அதை ஏற்றுக்கொள்ளலாமா?

**பதில்:** அவர்கள் வெளியில் சென்றுவிட்டார்கள். இரண்டு விஷயம். ஆளுநர் உரையை படிக்கும்போது அதைக் கண்டித்து வெளிநடப்பு செய்யக்கூடிய முறை ஏற்கனவே இருக்கிறது. ஆனால், இங்கே ஆளுநர் நடந்துகொண்டிருப்பது தான் பிரச்சனை. வெளிநடப்பு செய்யக்கூடிய உரிமை எதிர்க்கட்சியினருக்கு ஏற்கனவே இருக்கிறது.

**கேள்வி:** அமைதிப் பூங்காவான தமிழகம், அதேபோல, சமூக நீதி, சமத்துவம் … அவர் ஒப்புதல் கொடுத்திருக்கிறாரா?

**பதில்:** அவரால் ஒப்புதல் கொடுக்கப்பட்டிருக்கக்கூடிய வரிகள் தான், அதை அவர் ஏன் விட்டுவிட்டு படித்தார் என்பதுதான் பிரச்சனை.

- - - - -

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in